ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/10 - 2019 ජූනි මස 03 වැනි සඳුදා - 2019.06.03

*2126/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (XV) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், (2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2100/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 1996 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படும் “முகாமை மற்றும் வர்த்தக பீடம்” என்னும் விடயத்திற்கு நேரொத்ததான அத்தகைய கட்டளைக்கான II ஆம் அட்டவணையின் நிரல் II இல் காணப்படும் “(இ) முகாமை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை” என்னும் பதிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :

“(ஈ) சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறை”.

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, யூன் 03.

06-519

1A - PG 4542 — 518 (2019/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.